## *61*
## *பாகம் 2 (14:1-15:13):*

# “கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ, அவர்”
## (14:13ஆ-18)

*சபைக்குழுமத்தின் வழக்குகள் அடிக்கடி முக்கியமற்றவையாக உள்ளன. பல விஷயங்கள், "செயல்முறை மற்றும் முந்தின அனுபவம் மற்றும் கௌரவம்" என்பது போன்ற அற்பமான விஷயங்களாக உள்ளன.*[1]

- *செயல்முறை: "இந்தத் திட்டத்தை நாம் எவ்வாறு செயல்படுத்த வேண்டும்?"*
- *முந்தின அனுபவம்: "இதை முன்பு எப்போதாவது நாம் இவ்வாறு செய்திருக்கிறோமா?"*
- *கௌரவம்: "பணி செய்து முடிக்கப்படும்போது நற்பெயரைப் பெறுபவர் யார்?"*

*ரோமர் 14:13-18ல், பவுல் இப்படிப்பட்ட கருத்துவேறுபாடுகளை*[2] *ஒரு உயர்ந்த மட்டத்திற்குத் தூக்கிப்போட்டார். நாம் ஒரு சகோதரருடன் கருத்தொருமைப் படாதிருக்கிறபோது, அவரை நாம் பலமாகக் கருத்தை வெளியிடுபவர், முரட்டு சுபாவம் உள்ளவர், அல்லது ஒருவேளை கடும் வெறுப்பு நிறைந்தவர் என்றுகூடக் காணலாம். அப்படிப்பட்டவரை, "கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ, அவர்" ["கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே" (வசனம் 15இ)] என்று நாம் காண வேண்டும் என்று பவுல் விரும்பினார். இந்த நான்கு வார்த்தைகள் நமது இருதயங் களுக்குள் மூழ்க வேண்டும்: "கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ, அவர்." T. R. குளோவர் என்பவர், "இந்த வார்த்தைகள் [அமெரிக்காவில்] அடிமைத் தளையை அழித்துப்போட்டன" என்று கருத்துத் தெரிவித்தார்.*[3] *ஹால்ஃபோர்டு லுக்காக் என்பவர் இவற்றை "சுயநலமற்ற நடத்தைக்கு என்று ... உருவாக்கப்பட்ட வற்றிலேயே மிகவும் வல்லமை நிறைந்த விவாதம்" என்று அழைத்தார்.*[4]

*ரோமர் 14ன் முதல் பன்னிரெண்டு வசனங்களை நாம் படிக்கையில், பவுல் "பலவீனமான" மற்றும் "பலமான" என்ற இருவகைக் கிறிஸ்தவர்களுக்கும் புத்திகூறி னார் என்று நாம் கண்டோம். இந்த அதிகாரத்தின் எஞ்சியபகுதியில், அவர் தமது குறிப்புரைகளை "பலமானவர்கள்" மீது இலக்கு வைத்தார். "பலமான" சகோதரன் "பலவீனமான" சகோதரனை இரண்டாம் முறையாகக் கண்ணோக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். "பலவீனமான" சகோதரனை ஒரு* எதிராளி யாக *காண்பதற்குப் பதிலாக, அவரை "பலமான" சகோதரர் ஒரு வாய்ப்பாக*

- "கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ, அவருக்கு" உதவி செய்யக்கூடிய ஒரு *வாய்ப்பாக* - கண்ணோக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார்.

## ஊறுபடத்தக்க ஒரு சகோதரர் (14:13ஆ, 14)

**தீர்மானிக்கச் சிலவிஷயம் (வசனம் 13)**

13ம் வசனம், "இப்படியிருக்க" என்று தொடங்குகிறது, இது இவ்வசனத்தை 1 முதல் 12 வரையுள்ள வசனங்களுடன் பிணைக்கிறது. முதலாவது, இவ்வசனம் முந்திய பாடத்தின் செய்தியை முடித்து வைக்கிறது: "இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக" (வசனம் 13அ). மற்றவர்களைத் தீர்ப்பிடுவதில் நாம் ஏன் தாமதமாக இருக்க வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன.

> நாம் சர்வஞானியாக இருப்பதில்லை, எனவே எல்லா உண்மைகளையும் அறிந்திருப்பதில்லை. நாம் மக்களின் இருதயங்களைக் காண முடிவதில்லை, எனவே நம்மால் நோக்கங்களை வாசித்தறிய முடியாது. நாம் எல்லைக்கு உட்பட்டவர்களாக இருக்கிறோம், எனவே நாம், "பெரிய [முழு] சித்தரிப்பில்" குறைவுபடுகிறோம். நாம் ஆவிக்குரிய வகையில் அற்பமான உட்கண்ணோக்குக் கொண்டிருக்கிறோம், எனவே நாம் நமது பார்வை நோக்குகளை மங்கலாக்கக்கூடிய குருட்டுப் புள்ளிகளைக் கொண்டிருக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் மனிதர்களாக இருப்பதால், நாம் பூரணம் அற்றவர்களாக, சீர்பொருத்தமற்றவர்களாக, மற்றும் உள்ளுணர்வைச் சார்ந்தவர்களாக இருக்கிறோம்.[5]

13ம் வசனத்தின் தொடக்க அறிவுறுத்துதல்கள், வார்த்தைகளின் விளையாட்டு ஒன்றைக் கொண்டுள்ளன: "இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக [*krino* என்பதிலிருந்து]. ... தீர்மானித்துக்கொள்ளுங்கள் [*krino* என்பதிலிருந்து]" (வசனம் 13அ, இ). KJV வேதாகமம் *krino* என்பதன் இந்த இரட்டைப் பயன்பாட்டைப் பிரதிபலிக்கிறது: "Let us not therefore *judge* one another any more: but *judge* this rather ..." (என்னால் வலியுறுத்தப்படுகிறது).[6] நாம் மற்றவர்களைத் தீர்ப்பிடுவதை நிறுத்திவிட்டு நம்மை நாமே தீர்ப்பிடத் தொடங்கவேண்டும்.

பவுல் சரியான எண்ணப்போக்கிற்கான தேவையை சரியான செயல்பாட்டிற்கான தேவையுடன் ஒன்றுகலந்தார்: "... தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள்" (வசனம் 13ஆ, இ). "தடுக்கல்" மற்றும் "இடறல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைகள் அர்த்தத்தில் ஒரேவகையானவையாக உள்ளன. "தடுக்கல்" என்பது, "ஒருவர் தமது பாதங்களால் இடறி விழும்படி அவருக்கெதிராகப் போடப்படுவது" என்பதைக் குறிக்கிற *proskomma* (*pros* ["க்கு"] மற்றும் *kopto* ["மோத"]) என்பதிலிருந்து வந்துள்ளது.[7] "தடுக்கல்" என்பது, *skandalon* என்பதிலிருந்து வந்துள்ளது, இதிலிருந்தே நாம், "scandal" மற்றும் "scandalous" என்ற வார்த்தையைப் பெறுகிறோம்.[8] மூலத்தில், *skandalon* என்பது "இரை இணைக்கப்பட்ட ஒரு வலைப்பொறியின் பெயராக" இருந்தது.

*(CJB வேதாகமம் இவ்வார்த்தையை* "snare" *என்று மொழிபெயர்த்துள்ளது;* R. C. H. *லென்ஸ்கி என்பவரின் மொழிபெயர்ப்பு* "deathtrap" *என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது.[9]) புதிய ஏற்பாட்டில், skandalon என்பது எப்போதுமே உருவக நடையில் பயன்படுத்தப்பட்டுள்ளது மற்றும் இது "மற்றவர்களுக்கிடையில் இடையூறாக ஆவது, அல்லது மற்றவர்கள் விழுந்துபோகக் காரணமாயிருப்பது" என்பதைக் குறிக்கிறது.[10]*

*நமது பாடத்தில் நாம் இன்னும் முன்செல்லுகையில், ஒரு சகோதரரின் வழியில் தடுக்கலை அல்லது இடறலைப் போடுதல் என்பது பற்றிப் பவுல் அர்த்தப்படுத்தியது என்ன என்பதைக் கலந்துரையாடுவோம். இப்போதைக்கு, நாம் பின்வரும் அடிப்படை சத்தியத்தை நிலைநாட்டுவோம்: ஒரு சகோதரர் இடறுவதற்கோ அல்லது விழுவதற்கோ காரணமாகும்* எதையும் *நாம் செய்யக் கூடாது. ஒரு கேள்வி எப்போதும் நமது மனங்களில் இருக்க வேண்டும்: "நான் செய்கிற விஷயம் எனது சகோதரனிடத்தில் எவ்விதமான செயல்விளைவை ஏற்படுத்தும்?" உலகத்தில் உள்ளவர்கள் தங்கள் உரிமைகள் பற்றி அக்கறையாக உள்ளனர்; கிறிஸ்தவர்கள் தங்கள் பொறுப்புகளைப் பற்றி அதிகம் கவலைப் படுபவர்களாக இருக்க வேண்டும்.[11]*

### *அறிவதற்கு சில விஷயங்கள் (வசனம் 14)*

*14ம் வசனம், மாம்சம் உண்ணுதலின் பிரச்சனையின் மீது பவுலின் ஏவுதல் பெற்ற நிலைப்பாட்டினுடைய பலத்த ஒரு விளக்கத்தைக் கொண்டுள்ளது: "கர்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயித்திருக்கிறேன்" (வசனம் 14அ). இது "எனது மனதில் முற்றிலுமாக எந்த சந்தேகமும்* இல்லை*" என்று கூறுவதற்கான பவுலின் வழியாகும். "கர்த்தராகிய இயேசுவுக்குள்" என்பது, இவ்விஷயத்தின் மீது அப்போஸ்தலர் இயேசுவிடமிருந்து ஒரு விசேஷித்த வெளிப்பாட்டைப் பெற்றிருக்கலாம் என்று அர்த்தப்படலாம், அல்லது இவ்வார்த்தைகள், கர்த்த ருடன் அவர் கொண்டிருந்த நீடித்த இணைவின் விளைவாக அவர் இந்த முடிவை அடைந்திருந்தார் என்று அர்த்தப்பட முடியும்.[12]*

*பவுல் எதைப்பற்றி முழு நிச்சயமாயிருந்தார்? "ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்ல" (வசனம் 14அ). "தீட்டு" (இது* koinos *["பொதுவான"]) என்பதி லிருந்து வந்துள்ள ஒரு சொற்றொடராகும், இச்சொற்றொடர் "சடங்காச்சார வகையில் அசுத்தமானதாக" இருந்ததைக் குறிக்க யூதர்களால் பயன்படுத்தப் பட்டது.[13] மற்ற நிருபங்களில் பவுல் "நமது சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் செய்கைகள் உள்ளார்ந்த வகையில் பொல்லாங்கானவையாக உள்ளன என்பதில் முற்றிலும் வெளிப்படையாக" இருக்கிறார்[14] என்பதால், இவ்விடத்தில் அவரது கூற்றிற்குச் சில தகுதிகள் அவசியமாகின்றன. தொடக்கத்தில் தேவன், தாம் படைத்த எல்லாம் "நல்லதாக" இருந்தன என்று அறிவித்திருந்தார் (ஆதியா கமம் 1:31), ஆனால் அவரது படைப்பில் (எல்லாமும் இல்லையென்றாலும்) பெரும் பான்மையானவை, அவமாகவும் தவறாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இருந்த போதிலும், "தன்னிலே" (அதன் அத்தியாவசிய இயல்புக்குள்ளாக), படைப்பு "நல்லதாக" ("தீட்டில்லாததாக") நிலைத்துள்ளது (காண்க 1 தீமோத்தேயு 4:4). சந்தர்ப்பப்பொருளில், பவுல் குறிப்பாக மாம்சத்தைப் பற்றி பேசினார். மாம்சம் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டிருந்தாலும், அல்லது அது* kosher *நிபந்தனைகளின்படி ஆயத்தமாக்கப்படாது இருந்தாலும், எந்த மாம்சமும்*

*“தன்னிலே தீட்டுள்ளதல்ல.”*

*பவுல் கூறுவதைக் கவனியுங்கள்: “ஒருபொருளைத் தீட்டுள்ளதென்று எண்ணிக் கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு அது தீட்டுள்ளதாயிருக்கும்” (ரோமர் 14:14இ). ஏன்? “ஏனென்றால் அவன் அதை ஒரு தெளிவான மனச்சாட்சியுடன் பயன் படுத்தவோ அல்லது அதில் பங்கேற்கவோ முடியாது.”[15] நாம் மனச்சாட்சி பற்றிய பின்வரும் வலிவார்ந்த சத்தியத்தை இறுகப்பற்றிக்கொள்ளுதல் அவசியமாக உள்ளது: சிலபொருட்கள்/விஷயங்கள் தவறானவை என்று உங்கள் மனச்சாட்சி உங்களுக்குக் கூறும் என்றால், அது [அந்தப் பொருள்/விஷயம்] தவறாக உள்ளது. ரோமர் 2:14, 15 பற்றிய நமது கலந்துரையாடலில், ஒருவர் தமது மனச் சாட்சியை மீறாதிருத்தல் எவ்வளவு முக்கியமானது என்பதைக் குறிப்பிட் டோம்.[16] ஒரு தனிநபர், தவறானது என்று தமது மனச்சாட்சி கூறும் விஷயத்தை விடாப்பிடியாகச் செய்துகொண்டிருக்கும்போது, அவர் தமது மனச்சாட்சியில் சூடு வைத்து அதை மழுங்கடிக்கிறார் (காண்க 1 தீமோத்தேயு 4:1), அது தேவனால் தரப்பட்ட ஒரு பாதுகாப்புக் கருவி என்ற வகையில் அதன் பணியை நிறைவேற்ற இயலாததாகச் செய்கிறார். ஒருவர் (“பலவீனமான” சகோதரர் போன்று) தவறான கருத்தை மனதில் தேக்கி வைப்பார் என்றால், மனச்சாட்சியானது மறு படியும் கற்பிக்கப்பட வேண்டியது அவசியமாக உள்ளது; இருப்பினும், அது நடை பெறுகிற வரையில், அவர் தமது மனச்சாட்சிக்கு விரோதமாகச் செல்லக்கூடாது. அவன் “எதையாகிலும் தீட்டுள்ளதென்று நினைத்தால், அது அவனுக்கு தீட்டுள்ள தாய் இருக்கிறது.”*

*“பலவீனமானவரோ” அல்லது “பலமானவரோ,” எல்லாக் கிறிஸ்தவர்களுக்கு மான ஒரு செய்தி 14ம் வசனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது - ஆனால் பவுலின் வார்த்தைகள் குறிப்பாக “பலமான” சகோதரர்களுக்கு உரைக்கப்பட்டன என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். “பலமான” சகோதரர், “பலவீன மான” சகோதரர் பற்றிய பெரிய புரிந்துகொள்ளுதலைக் கொண்டிருக்க வேண்டும், அவருக்காக அதிகம் பரிவிரக்கம் கொண்டிருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார். பலவீனமான சகோதரர் என்பவர், “அவருக்காக கிறிஸ்து மரித்த” அவர் ஒரு ஊறுபடத்தக்க சகோதரராக இருந்தார்.*

## மதிப்புமிக்க ஒரு சகோதரர் (14:15)

### ஒரு முக்கியமான தனித்தன்மை

*15ம் வசனம் [ஆங்கில வேதாகமத்தில்] “For” (gar, “அதற்கான காரணத்தைக் காண்பித்தல்”) என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது. இவ்வார்த்தையானது அனேகமாக, “ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடற லையும் போடலாகாதென்றே ...” என்று கூறிய 13ம் வசனத்தைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். ஏன் கூடாது? பின்வரும் காரணத்திற்காக: “போஜனத்தினாலே உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்கினால், நீ அன்பாய் நடக்கிறவனல்ல” (வசனம் 15அ). இவ்விடத்திலுள்ள கிரேக்க வார்த்தை, “உணவு” என்பதற்கான (broma என்ற) பொதுவான வார்த்தையாகும், ஆனால் இது சில கிறிஸ்தவர்கள் உண்டிருக்கையில் மற்றவர்கள் உண்ணாதிருந்த மாம்சத்திற்கான குறிப்பை ஏற்படுத்துகிறது.*

*“விசனமுண்டாக்குதல்” என்பது “புலம்ப ... வருத்தம் நிறைந்து ... இருக்க”[17]*

என்று அர்த்தப்படுகிற "ஒரு பலத்த சொற்றொடரான"[18] *lupeo* என்பதிலிருந்து வந்துள்ளது. சந்தர்ப்பப்பொருளில், *lupeo* என்பது உணர்வுரீதியாக நிலைகுலைந்து போயிருப்பதைக் காட்டிலும் அதிகமானதைக் குறிக்கிறது. அடுத்த வாக்கியம் (வசனம் 15ஆ), "விசனமுண்டாக்குதல்" என்பதை கெடுத்தல் என்பதுடன் பிணைக் கிறது. ஒருசகோதரர் <u>ஆவிக்குரிய வகையில்</u> விசனமுண்டாக்கப்பட்டு இருத்தல், <u>நித்தியத்திற்கும்</u> கெடுக்கப்பட்டிருத்தல் பற்றிப் பவுல் பேசினார்.

"பலவீனமான" ஒரு சகோதரன் விசனம் உண்டாக்கப்படுதலுக்கும், தடுக்கி விழுந்து போவதற்கும் மற்றும் கெடுக்கப்பட்டுப் போவதற்கும், மாம்சம் உண்ணுதல் என்பது எவ்வாறு காரணமாயிருக்கக் கூடும்? இதற்கு மிகச்சிறந்த பதில் 1 கொரிந்தியர் 8ல் காணப்படுகிறது, அந்த அதிகாரம் இதேபோன்றதாக இல்லாவிட்டாலும் இதற்கு ஒப்பான ஒரு சூழ்நிலையை விவரிக்கிறது:

> விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைளைப் புசிக்கிற விஷயத்தைப் பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறோரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம். ...
>
> ஆகிலும், இந்த அறிவு எல்லாரிடத்திலும் இல்லை. சிலர் இன்றைய வரைக்கும் விக்கிரகத்தை ஒரு பொருளென்று எண்ணி, விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கிறார்கள்; அவர்களுடைய மனச்சாட்சி பலவீனமாயிருப்பதால் அசுசிப்படுகிறது. போஜனமானது நம்மைத் தேவ னுக்கு உகர்ந்தவர்களாக்கமாட்டாது; என்னத்தினாலெனில், புசிப்பதினால் நமக்கு ஒரு மேன்மையுமில்லை, புசியாதிருப்பதினால் நமக்கு ஒரு குறைவு மில்லை. ஆகிலும் இதைக்குறித்து உங்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரம் எவ்விதத்திலும் பலவீனருக்குத் தடுக்கலாகாதபடிக்குப் பாருங்கள். எப்படியெனில், அறிவுள்ளவனாகிய உன்னை விக்கிரகக்கோவிலிலே பந்தி யிருக்க ஒருவன் கண்டால், பலவீனனாயிருக்கிற அவனுடைய மனச்சாட்சி விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிப்பதற்குத் துணிவு கொள்ளுமல்லவா? பலவீனமுள்ள சகோதரன் உன் அறிவினிமித்தம் கெட்டுப் போகலாமா? அவனுக்காக கிறிஸ்து மரித்தாரே (1 கொரிந்தியர் 8:4-11).

டக்ளஸ் J. மூ என்பவர், இரண்டாவது சாத்தியக்கூறு ஒன்றைக் கூடுதலாகக் கூறினார்: ஒரு "பலத்த" சகோதரர், மாம்சம் உண்ணுதலுக்கான தமது சுயாதீனத்தை, "பலவீனமான" சகோதரர் ஒருவர் முற்றிலும் துரத்தப்படும்படி மனம் புண்படுமளவுக்கு, மேட்டிமையாகப் பயன்படுத்துதல்.[19] இருப்பினும், "பலமான" சகோதரர் மாம்சம் உண்ணுதலைக் காணும் "பலவீனமான" சகோதரர், தாமும் மாம்சம் உண்பார் - அவர் மனச்சாட்சி இதைத் தவறானது என்று கூறினாலும் இதை அவர் செய்வார் - என்பதே பவுலின் முதன்மையான கவலையாக இருந்தது. அவ்வாறு செய்வதில், அவர் <u>பாவம் செய்பவராயிருப்பார்</u> மற்றும் <u>ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்</u> (ரோமர் 14:23).

முன்னதாக, நான் வெள்ளிக்கிழமையில் மாம்சம் உண்ணுதல் தவறு என்று போதிக்கப்பட்டிருந்த ஒருவரின் மனம் மாற்றுப்படுதல் பற்றிய விவரிப்பு ஒன்றைப் பயன்படுத்தினேன். அவர் ஞானஸ்நானம் பெற்றவுடனே அப்படிப்பட்ட போதனையின் மதியீனம் பற்றி அவருக்கு விரிவுரை அளிக்கத் தக்க நேரமில்லை என்று நான் கருத்துத் தெரிவித்தேன்.[20] அந்த விவரிப்புடன்

பின்வருவதைக் கூட்ட என்னை அனுமதியுங்கள்: தொடர்ந்து வரும் வெள்ளிக் கிழமையன்று நடைபெறும் இரவு விருந்தில் உங்களுடன் சேர்ந்துகொள்ள அழைத்து அவருக்கு இறைச்சி [steak[21]] பரிமாறவும் கூடாது. அவ்வாறு செய்தல் அவரைத் தமது மனச்சாட்சியை மீறவும் பாவம் செய்யவும் ஊக்கப்படுத்தும்.

நமது வேதபாட வசனப்பகுதி, வேறொரு சகோதரர் அல்லது சகோதரி அங்கீ கரிக்காத ஒரு விஷயத்தைக் கண்டனம் பண்ணுவதில்லை என்று வலியுறுத்துதல் எனக்கு அவசியமாகிறது. பல பத்தாண்டுகள் பிரசங்கித்த பின்பு, நான் உங்களுக்கு இதைச் சொல்ல முடியும்: ஒரு சபைக்குழுமத்தில், என்ன செய்தாலும் (அல்லது செய்யாவிட்டாலும்) அதை விரும்பாதவர் குறைந்தபட்சம் ஒரு நபராவது இருப்பார். எவரொருவர் "விரும்பாத" ஏதாவதொரு விஷயத்தை நீக்குதல் என்பது சபையின் ஊழியத்தை இயக்கமற்ற நிலைக்குக் கொண்டுவரக்கூடும்.

மீண்டும் ஒருமுறை, நமக்குச் சமானநிலை தேவைப்படுகிறது. நாம் ஒரு நல்ல ஊழியத்தைத் தடைச்செய்கிற ஒருசில எதிர்மறை விமர்சனங்களை அனுமதிக்கக்கூடாது. அதேவேளையில், நாம் மற்றவர்களின் உறுதிப்பாடுகள் குறித்த உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும் மற்றும் அவர்கள் தங்கள் மனச்சாட்சிக்கு எதிராகச் செல்லக் காரணமாகும் எதையும் செய்வதை நாம் தவிர்க்க முயற்சி செய்ய வேண்டும். நான் ஊழியம் செய்துள்ள ஒவ்வொரு சபைக் குழுமத்திலும், ஏதாவது ஒரு நடவடிக்கையில் மன உணர்வுடன் ஈடுபடக் கூடா திருந்த ஒருசிலரை நாங்கள் கொண்டிருந்தோம். அவர்கள் அந்த நிகழ்வின் பாக மாக இருக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தவில்லை, மற்றும் அவர்கள் அதைப் பிரச்சனையாக்கவும் இல்லை. அவர்கள் தங்கள் மனச்சாட்சியை மீறா திருக்கும்படி அந்த நிகழ்வில் பங்கேற்காமல் மாத்திரம் இருந்தனர். மன உணர் வுள்ள சகோதரர்கள் மற்றும் வெறுமனே சச்சரவு செய்கிறவர்கள் ஆகியோரை வித்தியாசப்படுத்த நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இது எப்போதுமே சுலப மாக இருப்பதில்லை. சிலவேளைகளில், நீங்கள் முழங்காற்படியிட்டு தேவனிடம் ஞானத்தைக் கேட்பது அவசியமாயிருக்கும் (காண்க யாக்கோபு 1:5).

### ஏவுதல் பெற்ற ஒருவழிபாடு

வேறுபாடுகள் பற்றிய கலந்துரையாடல், பவுல் நமக்குத் தரவிரும்பிய வல்லமை நிறைந்த செய்தியிலிருந்து நம்மை வழிவிலக்கி விடக்கூடாது: "போஜனத்தி னாலே [மாம்சம் புசிக்கிறதினாலே] உன் சகோதரனுக்கு [ஆவிக்குரிய வகையில்] விசனமுண்டாக்கினால், *நீ அன்பாய் நடக்கிறவனல்ல*[22]" (வசனம் 15அ, ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பவுல் *அன்பு* காண்பிக்கப்படுதல் மீது அக்கறை கொண்டிருந்ததுபோல, யார் சரியானவராயிருந்தார் யார் தவறானவராயிருந்தார் என்பதன் மீது அக்கறை காண்பிக்கவில்லை.

ரோமர் 13:8ல் பவுல், "ஒருவரிடத்திலொருவர் *அன்புகூருகிற* கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" என்று கட்டளையிட்டார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). லியோன் மோரீஸ் என்பவர், "கிறிஸ்தவர் களுக்கு [,] அன்பு என்பது தர அளவையாக உள்ளது மற்றும் அன்பு என்பது தூண்டுத லாக உள்ளது" என்று எழுதினார்.[23] நம்மில் பெரும்பான்மையானவர்கள் கருத்து வேறுபாடுகளை விரும்புவதில்லை மற்றும் அவற்றை நாம் எதிர்மறை வாக மாத்திரமே கண்ணோக்குகிறோம். ஒருவேளை அவற்றை நாம், "கிறிஸ்தவ அன்பை நடைமுறைப்படுத்துவதற்கு வாய்ப்புகள்" என்ற வகையில்

கண்ணோக்கினால் அது நமக்கு உதவியாயிருக்கும்.[24]

**இன்றியமையாத தீர்மானம்**

15ம் வசனமானது பின்வரும் சினமூட்டும் கட்டளையுடன் முடிகிறது: "அவனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே, கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே" (வசனம் 15இ; 1 கொரிந்தியர் 8:11 உடன் ஒப்பிட்டுப்பார்க்கவும்). மீண்டும், பவுல் பலமான மொழிநடையைப் பயன்படுத்தினார்.[25] "கெடுத்தல்" என்பது, "முற்றிலுமாக அழித்தல்" என்பதைக் குறிக்கிற *apollumi* என்பதிலிருந்து வருகிறது.[26] முற்றிலுமாக அழிக்கப்பட்டிருத்தலின் அபாயத்தில் இருப்பவர் யார்? - கர்த்தரால் மிகவும் மதிக்கப்பட்டு அவர் யாருக்காகச் சிலுவையிடம் சென்றாரோ, அந்த சகோதரர்தான்.

இது பவுலின் வாசகர்களுக்கு ஒவ்வொன்றையும் கருத்துநோக்கில் இட்டிருக்க வேண்டும். ஒருபுறத்தில் மாம்சம் உண்பதற்கான உரிமை இருந்தது, மற்றும் இன்னொரு புறத்தில் இயேசு யாருக்காக மரித்தாரோ அவரது நித்திய அடைவிடம் இருந்தது. ஜான் R. W. ஸ்டாட் என்பவர், "அவருக்காக மரிக்கும் அளவுக்கு அவர்மீது இயேசு அன்புகூர்ந்தார் என்றால், அவரது மனச்சாட்சியின் காயத்திலிருந்து அவர் குணமாகப் போதுமான அளவுக்கு நாம் அவர்மீது அன்புகூர மாட்டோமா?" என்று கேட்டார்.[27] பவுலின் வார்த்தைகள் நமக்கும் விஷயங்களைக் கருத்துநோக்கில் இடவேண்டும். நீங்கள் அடுத்தமுறை இன்னொருவருடன் தீவிரமான விவாதத்தைக் கொண்டிருக்கும்போது, கருத்து வேறுபாட்டின் தலைப்பை சிலுவையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். எது அதிக முக்கியமானதாக உள்ளது? பவுல் நமக்குப் பின்வருமாறு கூறலாம்,

- "*உங்கள் சொந்த வழியைக் கொண்டிருப்பதற்காக உங்கள் விருப்பத்தைக் கொண்டு*, கிறிஸ்து யாருக்காக சிலுவையில் மரித்தாரோ அவரை கெடுத்துவிடாதீர்கள்."
- "*உங்கள் உரிமைகளை வலியுறுத்துவதன் மூலமாக*, கிறிஸ்து யாருக்காக சிலுவையில் மரித்தாரோ அவரை கெடுத்துவிடாதீர்கள்."
- "*உங்கள் உணர்வுகள் புண்படுத்தப்படும்போது, திருப்பித் தாக்குவதன் மூலமாக*, கிறிஸ்து யாருக்காக சிலுவையில் மரித்தாரோ அவரை கெடுத்துவிடாதீர்கள்."

## வலிவார்ந்த ஒரு சகோதரத்துவம் (14:16-18)

**உங்கள் செல்வாக்கைக் கவனியுங்கள்**

16ம் வசனம் இன்னொரு "Therefore" என்பதைக் கொண்டு தொடங்குகிறது [ஆங்கில வேதாகமத்தில்மாத்திரமே இப்படியுள்ளது], பவுல் அதிக முடிவுகளைத் தரவழைக்கத் தயாராயிருந்தார். அவர், "உங்கள் நன்மை தூஷிக்கப்பட[28] இடங்கொடாதிருங்கள்" என்று கூறினார் (வசனம் 16). "உங்கள் நன்மை" என்பது மாம்சம் புசித்தலைக் குறிக்கிறது. "பலமான" சகோதரனுக்கு, மாம்சம் புசித்தல் "ஒரு நன்மையாக," மகிழ்வுடன் அனுபவிக்கக் கூடியதாக, தேவனால் அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தது. இருப்பினும், குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ், இந்த நடைமுறை மற்றும் இதன் மறைமுக விளைவு ஆகியவை "தூஷிக்கப்படக்

கூடும்.''

மாம்சம் புசிப்பதை யார் தூஷிப்பார்கள்? ''பலவீனமான'' சகோதரனைப் பவுல் தமது சிந்தையில் கொண்டிருக்கச் சாத்தியம் உள்ளது, ஆனால் 16 முதல் 18 வரையுள்ள வசனங்களில் அப்போஸ்தலர், பொதுவாக மனிதகுலத்தை உள்ளடக்கும் வகையில் இந்தப் பிரச்சனையின் சாத்தியமான விளைவுகளை விரித்துரைத்தார். (18ம் வசனம் ''மனுஷர்'' என்று கூறுகிறது.) சபையில் பூசல்கள் கிறிஸ்துவின் நிமித்தமானவற்றை எவ்வளவாகப் பாதிக்கின்றன என்பது பற்றிப் பவுல் கவலை கொண்டிருந்தார் என்று நான் நினைக்கிறேன். மாம்சம் புசித்தல் என்பதில் உள்ளார்ந்த தவறு எதுவும் இல்லை - ஆனால் அந்த பழக்கமானது, சபைக்குழுமத்தில் [மன]இறுக்கம், கடின உணர்வுகள் மற்றும் பிரிவினைக்குக்கூடக் காரணமாகும் என்றால், அப்போது அது மிகவும் தவறானதாக இருந்தது. சபை உறுப்பினர்கள் ஒருவர் மற்றவருடன் இணக்கமாக இருக்க இயலாத விஷயத்தைப் போன்று வேறு எதுவும் கிறிஸ்துவின் நிமித்தமான வற்றை அதிகமாகப் புண்படுத்துவதில்லை. எவ்வித மாறுபாடுமின்றி, சபைக்குழு மத்தில் இடர்ப்பாடு பற்றிய செய்தியானது சமூகம் முழுவதிலும் பரவுகிறது மற்றும் சபையானது ஏளனத்திற்குரிய பொருளாகிவிடுகிறது. விஷயம் அப்படி யிருக்கும்போது, "நன்மை" என்பது "தூஷிக்கப்படலாம்."

மற்ற சில வழிகளிலும், "நன்மையான" சில விஷயம் "தூஷிக்கப்பட்டு" இருக்க லாம். ஒரு விவரிப்பு எனது மனதிற்கு வருகிறது.[29] அமெரிக்காவிலிருந்து ஒரு இளம் பெண், ஒரு குறிப்பிட்ட சபைக்குழுமத்திற்கு உதவுவதற்காக இன்னொரு நாட்டிற்குச் சென்றார். அமெரிக்காவில் பேஸ்பால் என்ற விளையாட்டு "தேசிய பொழுதுபோக்கு" என்று அழைக்கப்படுகிறது, எனவே அந்த இளம்பெண், சபைக் குழுமத்திலிருந்த பிள்ளைகளுடன் பேஸ்பால் விளையாட்டுக்குழு ஒன்றை அமைக்க முடிவுசெய்தார். அவர்கள் விளையாடிக்கொண்டிருக்கையில், சபையின் மூப்பர் ஒருவர் அவர்களைப் பார்த்து, அந்த இளம்பெண்ணை அருகில் அழைத்தார். அந்த ஊழியக்காரியிடத்தில் அவர், தங்களது நாட்டில் பேஸ்பால் விளையாட்டு சூதாட்டத்துடன் நெருங்கிப் பிணைக்கப்பட்டிருந்ததால், கிறிஸ்த வர்கள் அதை விளையாடுவதில்லை என்று கூறினார். அந்த இளம்பெண் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, பிள்ளைகள் செய்வதற்கு மற்ற நடவடிக்கை களைக் கண்டறிந்தார்.

நாம் செய்கிற எல்லாவற்றைப் பற்றியும், நாம் நம்மையே பின்வருவன போன்ற கேள்விகளைக் கேட்டுக்கொள்வது அவசியமாக உள்ளது: "இது கிறிஸ்துவினிமித்த மானவற்றை மற்றும் சுவிசேஷம் பரவுதலை எவ்வாறு பாதிக்கும்?"; "இது சமாதா னத்தை ஏற்படுத்துமா அல்லது பிரிவினை உண்டாக்குமா?''; ''இது சபை வளர்ச்சிக்கு உதவுமா அல்லது சபை வளர்ச்சியைத் தடைசெய்யுமா?''

### உங்கள் முன்னுரிமைகளைப் புரிந்துகொள்ளுங்கள்

16ம் வசனத்தில் தொடங்கிய சிந்தனையை 17ம் வசனம் நிறைவுசெய்கிறது: ''உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்பும் [உணவைப் புசித்தல்[30]] அல்ல, அது நீதியும் சமா தானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது'' (வசனங்கள் 16, 17).

"தேவனுடைய இராஜ்யம்" என்பது இவ்விடத்தில் சபையைக் குறிக்கிறது.[31]

பவுல் ஒரு சகோதரர் மீதான அக்கறையிலிருந்து சகோதரத்துவத்தின் மீது பொது வான அக்கறைக்கு - வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், "கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ" அவர்கள் *யாவர்மீதுமான* அக்கறைக்கு (காண்க எபேசியர் 5:23, 25) - கடந்து சென்றார். இராஜ்யத்தை/சபையை இருக்கச் செய்வதற்குத் தேவன் செய்த எல்லாவற்றையும் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர் அதை, மக்கள் வட்டமாக அமர்ந்துகொண்டு, இரவு உணவிற்கு எதைப் பரிமாறலாம் என்று விவாதிப்பதற்காகச் செய்தாரா? இல்லை. இது இராஜ்யத்தை/சபையைப் பற்றிய *யாவுமல்ல* என்று பவுல் கூறினார் (காண்க 1 கொரிந்தியர் 8:8). மாறாக, "அது [தேவனுடைய இராஜ்யம்] நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது."[32]

- "நீதி" (*dikaiosune*): தேவன் நம்மிடம் விரும்புகிறபடியான வழியில் வாழுதல்.
- "சமாதானம்" (*eirene*): நமது சகோதர சகோதரிகளுடன் சமாதான மாக வாழப் பிரயாசப்படுதல்.
- "சந்தோஷம்" (*chara*): மற்றவர்களின் வாழ்வில் சந்தோஷத்தை, "பரிசுத்த ஆவியானவருக்குள்" மாத்திரம் கண்டறியப்படக்கூடிய சந்தோஷத்தைக் கொண்டுவர உழைத்தல்.[33]

மீண்டுமாகப் பவுல், சரியான முன்னுரிமைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கிறிஸ்தவர்களுக்கு அறைகூவல் விடுத்தார். அற்பமான விஷயம் ஒன்றிற்காக அடுத்தமுறை நமது உணர்வுகள் சீற்றம் கொள்ளும்போது, நாம் நிதானித்து, "இது உண்மையிலேயே இராஜ்யம் பற்றிய எல்லாமுமாக உள்ளதா? இது நீதியையும், சமாதானத்தையும் சந்தோஷத்தையும் மேம்படுத்த அவசிய மானதா?" என்று கேட்டுக்கொள்ள வேண்டும்.

**கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்**

18ம் வசனத்தில் பவுல் கலந்துரையாடலின் இந்தக் கருத்தின்மீதான தமது சிந்தனைகளை முடித்து வைத்தார்: "இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கிகரிக்கப்பட்டவனுமா யிருக்கிறான்." "இவைகளிலே" என்பது 1ம் வசனம் தொடங்கி, அப்போஸ்தலர் கூறி யுள்ள யாவற்றையும் உள்ளடக்குகிறது. இது ஒரு சகோதரனின் வழியில் தடுக்கலைப் போடாமலிருப்பதற்கு ஒருவருடைய உரிமையை விட்டுக்கொடுப் பதை உள்ளடக்குகிறது. இது ஒரு சகோதரரை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் அவரைத் தீர்ப்பிடாதிருத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. இது "கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ" அந்த சகோதரர்மீது எப்போதும் அன்புகாண்பித்தலை உள்ளடக்குகிறது. நீங்களும் நானும் இதை நமது *சகோதரருக்கு* ஊழியம் செய்தல் என்பதாகக் கண்ணோக்கலாம், ஆனால் பவுல் இதை கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தல் என்பதாகக் குறிப்பிட்டார் (காண்க 1 கொரிந்தியர் 2:2). மீண்டுமாக, அவர் இந்த விஷயத்தை சரியானவர் யார் தவறானவர் யார் என்ற கேள்விக்கு மேலாக உயர்த்தினார். அவர் இதை நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறோமா இல்லையா என்ற விஷயமாக்கினார்.

கிறிஸ்து கட்டளையிட்டபடி நடந்துகொள்வதன் மூலமாக நாம் கிறிஸ்து

வுக்கு ஊழியம் செய்வோம் என்றால், முதலில் நாம், "தேவனால் ஏற்றுக்கொள்ளப் படுவோம்." கர்த்தருக்குப் பிரியமாயிருத்தல் என்பது முதன்மைத் தனிச்சிறப்பு மிக்கதாக உள்ளது. இருப்பினும், விரும்பத்தக்க இன்னொரு பயன் விளையலாம்: நாம் "மனுஷரால் அங்கீகரிக்கப்பட்டவர்களாக" இருப்போம்.[34] ஒரு சபைக்குழு மத்தில், அன்பும் இசைவிணக்கமும் மேலோங்கி இருக்கும்போது, புறம்பே இருக்கும் உலகம்கூட அதினால் வசீகரிக்கப்படுகிறது. ஒரு மொழிபெயர்ப்பில், "He who serves Christ in this way is ... respected among men" என்றுள்ளது (Mc-Cord).

## முடிவுரை

மாம்சம் புசித்தல் பற்றிய பவுலின் கலந்துரையாடல் 14ம் அதிகாரத்தின் கடைசி வசனங்கள் மற்றும் 15ம் அதிகாரத்தின் தொடக்க வசனங்கள் வரையிலும் தொடருகிறது. இருந்தபோதிலும், அவரது கலந்துரையாடலின் மையப்பகுதி 14:15ல் காணப்படுகிறது: "கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே." F. F. புரூஸ் என்பவர், "இந்த ... வார்த்தைகள் மனிதரின் தகுதியினுடைய தெய்வீக அளவையைச் சொல்விளக்கப்படுத்துகின்றன" என்று கூறினார்.[35]

இந்தப் பாடத்தில் நாம் பவுல் கலந்துரையாடலைத் திரும்பத் திரும்ப எவ்வாறு ஒரு உயர்மட்டத்திற்கு உயர்த்தினார் என்று கண்டிருக்கிறோம். செயல் விளைவில், அவர் நமது அக்கறை, மாம்சம் புசித்தல் அல்லது புசியாதிருத்தல் என்பது பற்றி இருப்பதில்லை என்று கூறினார். மாறாக, கிறிஸ்தவம் என்பது பின்வருவன பற்றியதாகும் ...

- ஆவிக்குரிய வகையில் வலுவற்றிருக்கும் சகோதரர்மீது அக்கறை.
- அன்பு காண்பித்தல்.
- "கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ" அவர்களை நாம் எவ்வாறு நடத்துகிறோம்.
- சபையைப் பற்றிய உலகத்தின் கண்ணோட்டத்தை நமது செயல்கள் எவ்வாறு பாதிக்கின்றன.
- நமக்கு மிகவும் முக்கியமானது எது.
- கிறிஸ்துவுக்கு ஊழியம்செய்தல்!

பவுலின் புத்திமதிகள் உணர்வெழுச்சிகளைக் குளுமைப்படுத்தாவிட்டால், வேறு எதுவுமே அதைச் செய்ய இயலாது. அவரது வார்த்தைகள் சமாதானத்தை உண்டாக்காவிட்டால், நமது இருதயங்களில் ஏதோ சிலவிஷயங்கள் நம்பிக்கை யற்ற வகையில் பெருந்தவறாக இருக்கின்றன என்றாகிறது!

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

இந்தப் பாடத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக் கேட்பவர் களை, சபையின் உறுப்பினர்கள் ஆகும்படி, "கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ" அந்த இரட்சிக்கப்பட்ட மக்களின் குழுவில் இணையும்படி வேண்டிக்கொள் ளுங்கள் (காண்க எபேசியர் 5:23, 25). கிறிஸ்துவினிமித்தமானவைகள் "தூஷிக்கப்

படுதலை” விளைவித்திருந்த வார்த்தைகள் மற்றும் செயல்கள் கொண்டுள்ள கிறிஸ்தவர்களிடம் பதில்செயலை ஊக்குவிக்கவும் நீங்கள் விரும்பலாம் (ரோமர் 14:16). இவர்களில் முதல் குழுவினர் விசுவாசித்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெறுதல் தேவையாக உள்ளது (யோவான் 3:16; லூக்கா 13:3; மாற்கு 16:16). இரண்டாவது குழுவிலுள்ளவர்கள் தங்கள் தவறுகளை அறிக்கையிட்டு, மனந்திரும்பி தங்களுடன் ஜெபிக்கும்படி கிறிஸ்துவுக்குள்ளான தங்கள் சகோதர சகோதரிகளைக் கேட்டுக்கொள்ள வேண்டும் (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9; யாக்கோபு 5:16).

இந்த எடுத்துரைப்பை முடிப்பதில், உங்கள் உரையைக் கேட்பவர்களிடத்தில் இந்த எடுத்துரைப்பில் கருத்தாகத் தெரிவிக்கப்பட்ட கேள்விகளை மறுபடியும் நினைவூட்டுதல் என்பது மறுகண்ணோட்டத்திற்கான இன்னொரு வழியாக உள்ளது. இவை நாம் யாவரும், நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகளாக உள்ளன.

இந்த எடுத்துரைப்பும், “சரியாக இருத்தலைக் காட்டிலும் அதிக முக்கியமானது? (14:19-23)” என்ற [அடுத்த] எடுத்துரைப்பும், ஒரே பாடத்தின் இரு பகுதிகளாக உள்ளன. இவற்றை நீங்கள் ஒன்றிணைத்துக் கொடுக்க விரும்பலாம். இவ்விரு எடுத்துரைப்புகளின் ஆய்வுக்கருத்தைப் பின்வரும் பிரதான தலைப்புகளுடன் பயன்படுத்த முடியும்: (1) உங்கள் சகோதரரை வருத்தப்படுத்தாதீர்கள் (வசனங்கள் 1-12); (2) உங்கள் சகோதரருக்கு உதவுங்கள் (வசனங்கள் 13-28).

---

குறிப்புகள்

[1]William Barclay, *The Letter to the Romans,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 193. [2]ரோமர் 14ம் அதிகாரம் கருத்தின் விஷயங்களைப் பற்றியது என்பதை நினைவில் வையுங்கள். [3]Quoted in Halford E. Luccock, *Preaching Values in the Epistles of Paul,* vol. 1, *Romans and First Corinthians* (New York: Harper & Brothers, 1959), 102. [4]Ibid. [5]Charles R. Swindoll, *The Grace Awakening* (Anaheim, Calif.: Insight for Living, 1990), 49-50. [6]NEB வேதாகமத்தில், “Let us ... cease *judging* one another, but rather make this simple *judgement*” என்றுள்ளது. (என்னால் வலியுறுத்தப்படுகிறது.) [7]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 441 என்ற புத்தகத்தில் இவ்விரு வார்த்தைகளும் ஒரே தலைப்பின்கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன. இவ்வார்த்தைகள் அர்த்தத்தில் மிகவும் ஒன்றுபோல் இருக்கின்றன, அதே வேளையில் NASB வேதாகமத்தில் முதலாவது “obstacle” என்றும் இரண்டாவது “stumbling block” என்றும் உள்ளது, பல மொழிபெயர்ப்புகள் இவ்வரிசை முறையைத் திருப்பிப் போட்டுள்ளன. [8]ஜிம் மெக்கைகன் என்பவர், “பலவீனமான ஆத்துமாக்கள்மீது அன்பும் இரக்கமும் இல்லாது நடந்துகொள்ளுதல் என்பது வெட்கமானதாக உள்ளது!” என்று கருத்து தெரிவித்தார். (Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series [Lubbock, Tex.: Montex Publishing Co., 1982], 401.) [9]R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's Epistle to the Romans* (Minneapolis: Augsburg Publishing House, 1936), 832. [10]Vine, 441.

[11]Jimmy Allen, *Romans, The Clearest Gospel of All* (Searcy, Ark.: By the author, 2005), 285. [12]இந்த சாத்தியக்கூறுகள் யாவையும் இன்னும் அதிகமானவையும் பல்வேறு மொழிபெயர்ப்புகள் மற்றும் பொழிப்புரையில் பிரதிபலிக்கப்பட்டுள்ளன. [13]Vine, 113,

649. [14]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 365. [15]Richard A. Batey, *The Letter of Paul to the Romans,* The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 171. [16]*ரோமருக்கு எழுதிய நிருபம், 1* என்ற புத்தகத்தில், "புறஜாதியார், மனச்சாட்சி மற்றும் ஊழியப்பணி (2:14, 15)" என்ற பாடத்திலுள்ள, மனச்சாட்சி பற்றிய கருத்துக்களை மறுகண்ணோட்டமிட நீங்கள் விரும்பலாம். [17]Vine, 281. [18]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 487. [19]Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 460. [20]இந்தப் புத்தகத்தின் முற்பகுதியிலுள்ள "கிறிஸ்தவர்கள் கருத்துவேறுபடும்போது (14:1-4)" என்ற பாடத்தில் 1ம் வசனத்தின்மீதான விளக்கங்களைக் காணவும்.

[21]இவ்விடத்தில் "steak" என்பதற்குப் பதிலாக உங்களது கலாச்சாரத்திலுள்ள விசேஷித்த மாம்ச வகை உணவின் பெயரைப் பயன்படுத்துங்கள். (உதாரணமாக, இறைச்சி பிரியாணி.) [22]"நடத்தல்" என்பது "வாழுதல்" என்பதற்கான பவுலின் பிரியமான சொல்விளக்கங்களில் ஒன்றாகும். [23]Morris, 487. [24]Fritz Ridenour, ed., *How to Be a Christian Without Being Religious* (Glendale, Calif.: Regal Books, G/L Publications, 1967), 124. [25]Moo, 460. [26]Vine, 164. [27]Stott, 365. [28]தூஷிக்கப்பட [ஆங்கிலத்தில் இது, "be spoken of as evil" என்றுள்ளது] என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை நேரடியாக, "தூஷிக்கப்படுதல்" என்றே அர்த்தப்படுகிறது. [29]Adapted from Jim Townsend, *Romans: Let Justice Roll* (Elgin, Ill.: David C. Cook Publishing Co., 1988), 93. [30]இவ்விடத்தில், பவுல் பொதுவான வகையில் ஒரு உணவைப் பற்றிக் குறிப்பிட்டார் என்றிராத வரையில், அவர் "குடியிருப்பு" என்பதை ஏன் அறிமுகப்படுத்தினார் என்பதைப் பற்றி நாம் உறுதியான கருத்து எதையும் கொண்டிருப்பதில்லை; புசித்தலும் குடித்தலும் உணவின் முழுமையான பாகங்களாக உள்ளன. 21ம் வசனத்தின்மீதான கலந்துரையாடலைக் காணவும்.

[31]"சபை" மற்றும் "இராஜ்யம்" என்ற சொற்றொடர்கள், மத்தேயு 16:18, 19ல் ஒன்றிற்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. "இராஜ்யம்" என்ற வார்த்தையைப் பவுல் மிக அரிதாகவே பயன்படுத்தினார் (ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே இவ்வார்த்தை காணப்படுகிறது); வழக்கமாக அவர் "சபை" என்றே குறிப்பிட்டார். ஒருவேளை அவர் கர்த்தருடைய *ஆளுகையானது* எந்தத் தனிநபருடைய *உரிமையைக்* காட்டிலும் அதிக முக்கியமானதாக உள்ளது என்பதை வலியுறுத்துவதற்காக இவ்விடத்தில் இவ்வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கலாம். [32]"நீதியும் சமாதானமும் சந்தோஷமும்" என்பது *தேவன்* நமக்காகச் செய்துள்ளவை மற்றும் செய்து கொண்டிருப்பவை ஆகியவற்றைக் குறிக்கக்கூடும், ஆனால் சந்தர்ப்பப் பொருளானது *நாம்* செய்யவேண்டியவை மீது கவனம்குவிப்பதாகக் காணப்படுகிறது. [33]கிறிஸ்தவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் என்ன செய்கிறார் என்பது பற்றி மறு கண்ணோட்டமிட நீங்கள் விரும்பலாம் (ரோமர் 8). [34]இது "பலவீனமான" சகோதரர்களால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் என்று அர்த்தப்படக் கூடும், ஆனால் பரவலான பயன்பாடு அவசியமானதாகக் காணப்படுகிறது. [35]F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* rev. ed., Tyndale New Testament Commentaries series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1996 reprint), 238.